©
தமிழ் நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 4.80 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 40] சென்னை, புதன்கிழமை, அக்டோபர் 22, 2014
ஐப்பசி 5, ஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045

## பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை (2D) எண் 3, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 27 ஜனவரி 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 10–12–2008 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–ல் 406 ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/594/2008 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் ஆட்டோ ரிக்–ஷாக்கள் மற்றும் சீருந்துகளில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களை, விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**ஆட்டோ ரிக்ஷாக்கள் மற்றும் சீருந்துகளில் வேலைவாய்ப்பு**

| *தொழிலாளர் வகைகள்.* | | *குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ. காசு)* |
|---|---|---|
| *(1)* | | *(2)* |
| ஆட்டோ ரிக்ஷா ஓட்டுநர்கள் (மீட்டர் பொருத்தப்பட்டது) | .. | நாளொன்றுக்கு 288.00 (அல்லது) மாதமொன்றுக்கு 7479.00 |
| சீருந்து ஓட்டுநர்கள் (மீட்டர் பொருத்தப்பட்டது) | .. | நாளொன்றுக்கு 327.00 (அல்லது) மாதமொன்றுக்கு 8483.00 |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:–** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்களுடன் தொழிலாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ. 46.45 (நாற்பத்து ஆறு ரூபாய் நாற்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

2 (i) தினப்படி குறைந்தளவு ஊதிய வீதங்களில் வாராந்திர விடுமுறை ஊதியங்களும் அடங்கும்.

(ii) தினப்படி அகவிலைப்படி வீதத்தைக் கணக்கீடுவதற்கு மாதாந்திர அகவிலைப்படி வீதங்களை 26ஆல் வகுக்கவேண்டும்.

**3.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண் 14, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J2)த் துறை, 5 பிப்ரவரி 2014.]*

1993 ஆம் ஆண்டு மனித கழிவுகளை மனிதர்களே அகற்றுவோரை பணியிலமர்த்துவதையும் உலர் கழிப்பறைகள் கட்டுவதையும் தடைசெய்யும் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 46/1993) கீழ், இந்த மாநிலத்தில் தடைசெய்யப்பட்ட நடவடிக்கைகள் நீங்கலாக, பெருக்குதல் மற்றும் சுத்தப்படுத்தல் தொழிலில் வேலைவாய்ப்பு குறித்து 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948)கீழ் குறைந்தளவு ஊதியங்கள் நிர்ணயிக்கப்படவேண்டும் என தமிழ்நாடு அரசு கருதுவதாலும்;

**2.** மற்றும் மேற்சொன்ன சட்டத்தின் 27 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும் மேற்சொன்ன தொழிலை 1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) விவர அட்டவணையின் பாகம் 1-இல் சேர்ப்பதற்கான அவர்களின் நோக்கமானது. மேற்சொன்ன சட்டத்தின் அத்தகைய பிரிவில் சொல்லியுள்ளவாறாக இதனால் அறிவிக்கப்படுவதாலும்;

**3. *தமிழ்நாடு அரசிதழில்*** இந்த அறிவிக்கை வெளியிடப்படுகின்ற நாளிலிருந்து மூன்று மாதங்களுக்குள் இதனால் பாதிக்கப்படக்கூடிய யாதொரு நபர்களிடமிருந்து அல்லது அமைப்புகளிடமிருந்து பெறப்படும் ஏதேனும் மறுப்புரை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு கருதிப்பார்க்கும் மறுப்புரைகள் அல்லது கருத்துரைகள் எவையேனுமிருப்பின் அவற்றை தொழிலாளர் நலத் துறை ஆணையாளர், தேனாம்பேட்டை, சென்னை—600 006 வாயிலாக தமிழ்நாடு அரசுச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்று முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 15, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 29 ஏப்ரல் 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு, 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (c) பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் வெளியிடக் கருதிய பின்வரும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

**2.** இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் முடிவடைந்த நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு மாதங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற ஏதேனும் மறுப்புரையை அல்லது கருத்துரையை தமிழ்நாடு அரசு

பரிசீலிக்குமென்றும் இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை–600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

## வரைவு அறிவிக்கை

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு மேற்சொன்ன 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (c) பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 15–09–2004 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு 2–ல், 454–455 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா825/2004 ஆம் எண்ணுள்ள அறிவிக்கையை ரத்து செய்து, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரித்தல் உட்பட) தொழிலில் ஈடுபட்டுள்ள கீழே விவர அட்டவணை நெடும்பத்தி (1)–ல் குறிப்பிடப்பட்டுள்ள வகையைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை, அந்த (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்:—

### விவர அட்டவணை

**புகையிலை தயாரிப்புத் (பீடி சுற்றுதல் நீங்கலாக பீடி தயாரிப்பு உட்பட) தொழிலில் வேலைவாய்ப்பு**

| | *தொழிலாளர் வகைகள்*<br>*(1)* | *குறைந்தளவு அடிப்படை ஊதியவீதங்கள் (மாதமொன்றுக்கு)*<br>*ரூ. காசுகள்*<br>*(2)* |
|---|---|---|
| 1 | மேலாளர் | 5000.00 |
| 2 | கணக்காளர் / கணினி இயக்குபவர் | 4750.00 |
| 3 | எழுத்தர் / தட்டச்சர் / விற்பனையாள் | 4500.00 |
| 4 | சேகரிப்பவர் | 4375.00 |
| 5 | சரிபார்ப்பவர் / மேஸ்திரி / வகைபடுத்துபவர் / கண்காணிப்பாளர் | 4250.00 |
| 6 | இலை, தூள் வழங்குபவர் / பை தைப்பவர் / சிப்பமாக்குபவர் | 4125.00 |
| 7 | அலுவலக உதவியாள் / ஏவலாள் | 4125.00 |
| 8 | ஓட்டுநர் (டிரக் / லாரி) | 4125.00 |
| 9 | ஓட்டுநர் (சீரூந்து / வேன்) | 4000.00 |
| 10 | காவலாளி | 3500.00 |
| 11 | துப்புரவாளர் / பெருக்குபவர் | 3125.00 |
| 12 | ஏனைய பணியாளர்கள் | 3125.00 |

**செய்யும் வேலைக்கேற்ப ஊதியங்கள்:**

(i) 4000 கட்டுகளின் மீது லித்தோ உறைகளுக்கு நாளொன்றுக்கு ரூ. 156.25 பெயர்ச் சீட்டு ஒட்டுதல்.

**விளக்கங்கள்:**

(i) ஒவ்வொரு கட்டும் 125 பீடிகள் கொண்டது.

(ii) கட்டு ஒன்றுக்கு 10, 15 அல்லது 20 பீடிகள் கொண்ட கட்டுகளுக்கு பெயர்ச் சீட்டு ஒட்டுவதற்கு வீதப்படியான ஊதியங்கள் வழங்கப்பட வேண்டும்.

(iii) மேல் பெயர்ச்சீட்டு ஒட்டுவதற்கு 30% மிகை ஊதியம் வழங்கப்பட வேண்டும். அதற்கு அகவிலைப்படியும் வழங்கப்பட வேண்டும்.

(2) **வளைய பெயர்ச்சீட்டு ஒட்டுதல்** 1000 பீடிகளுக்கு ரூ. 6.25

(வளைய பெயர்ச் சீட்டு ஒட்டுவதற்கு பசையும் நூலும் நிருவாகத்தால் வழங்கப்பட வேண்டும்.)
ஒரு நாள் உழைப்பு என்பது நாளொன்றுக்கு 10,000 பீடிகள் தயாரிப்பதாகும்.

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:—** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

*(i)* அகவிலைப்படியானது, 2000ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 1982ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 475 புள்ளிகள்). 475 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ 6.55 (ஆறு ரூபாய் ஐம்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

*(ii)* முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

**2.** பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

**3.** நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

**4.** மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு, நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

**5.** தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 16, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 30 ஏப்ரல் 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் 21–11–2012 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2–ல் 667 முதல் 672 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/தொ.வே.வா/782/2012 ஆம் எண் அறிவிக்கையில் பின்வரும் திருத்தத்தை இதனால் செய்கிறார்:—

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் ‘‘விவர அட்டவணை’’ என்பதன் கீழ்வரும் “III செய்யும் வேலைக்கேற்ப ஊதியங்கள்’’ என்ற தலைப்பின் கீழ் வரும் ‘‘2 பட்டாசு (காகிதத்தால் சுற்றப்பட்ட வகை) தயாரிப்பு’’ என்ற துணைத்தலைப்பின்கீழ் வரும் இனம் (iv) மற்றும் அது தொடர்பான பதிவுகளுக்குப் பதிலாக பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் அதாவது:—

| | | |
|---|---|---|
| (iv) காகிதம் சுற்றப்பட்டவை (உறையிடுதல்) | 5 செ.மீ. முதல் 7 செ.மீ. வரையில் | 7 செ.மீட்டருக்கு மேற்பட்ட |
| ஒற்றைக் காகிதம் | யூனிட் ஒன்றுக்கு 0.78 | யூனிட் ஒன்றுக்கு 1.34 |
| II மற்றும் III காகிதம் | 0.84 யூனிட் ஒன்றுக்கு | |
| IV காகிதம் | 0.98 யூனிட் ஒன்றுக்கு. | |

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழிபெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 27, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 18 ஜூன் 2014.]*

**1948** ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் **11/1948**) **3** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(2)** உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், **22–09–2004** ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II–பிரிவு **2**–ல், **467** முதல் **469** வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/LE/842/2004 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், வரைவு அறிவிக்கையின் கீழேயுள்ள விவர அட்டவணையின் **(2)** நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் சாலை அமைத்தல் அல்லது பராமரித்தல் தொழிலில் ஈடுபட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, விவர அட்டவணையின் **(3)** நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் **5** ஆம் பிரிவைச் சேர்ந்த **(1)** உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

**2** இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அதுநாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**சாலை அமைத்தல் மற்றும் பராமரித்தல் தொழிலில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்.* | *பணியாளர்களின் வகைகள்.* | *நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்.* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம் A* | *மண்டலம் B* | *மண்டலம் C* |
| | | *ரூ.காசு* | *ரூ.காசு* | *ரூ.காசு* |
| **(1)** | கல் உடைப்பவர் அல்லது கல் நொறுக்குபவர் அல்லது கல் நசுக்குபவர் | | | |
| | நிலை – 1 | **405.00** | **397.50** | **382.00** |
| | நிலை – 2 | **392.00** | **387.50** | **378.50** |
| **(2)** | கொத்தனார் அல்லது செங்கல் பாவுபவர் | | | |
| | நிலை – 1 | **406.50** | **405.00** | **387.50** |
| | நிலை – 2 | **397.50** | **392.00** | **382.00** |
| **(3)** | தச்சர் | | | |
| | நிலை – 1 | **406.50** | **405.00** | **387.50** |
| | நிலை – 2 | **397.50** | **392.00** | **382.00** |
| **(4)** | வண்ணம் பூசுபவர் அல்லது மெருகெண்ணெய் பூசுபவர் | | | |
| | நிலை – 1 | **392.00** | **387.50** | **378.50** |
| | நிலை – 2 | **382.50** | **378.50** | **368.00** |
| **(5)** | கம்பி வளைப்பவர் உட்பட கம்மியர் பொருத்துநர் | | | |
| | நிலை – 1 | **392.00** | **387.50** | **378.50** |
| | நிலை – 2 | **382.50** | **378.50** | **368.00** |
| **(6)** | சாலைக் குழாய்ப் பணிகளுக்காக குழாய் வேலை செய்பவர் | | | |
| | நிலை – 1 | **392.00** | **387.50** | **378.50** |
| | நிலை – 2 | **382.50** | **378.50** | **368.00** |

| தொடர் எண். (1) | பணியாளர்களின் வகைகள். (2) | நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள். (3) | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் A ரூ.காசு | மண்டலம் B ரூ.காசு | மண்டலம் C ரூ.காசு |
| (7) | மின் பணியாளர் / ஆய்வகத் தொழில் நுட்பப் பணியாளர் | | | |
| | நிலை – 1 | 405.00 | 397.50 | 382.00 |
| | நிலை – 2 | 392.00 | 387.50 | 378.50 |
| (8) | இயந்திரக் கம்மியர் | | | |
| | நிலை – 1 | 405.00 | 397.50 | 382.00 |
| | நிலை – 2 | 392.00 | 387.50 | 378.50 |
| (9) | கிணறு தோண்டுபவர் | | | |
| | (i) ஆழக் கிணறு தோண்டுபவர் | 416.50 | 406.50 | 397.50 |
| | (ii) சாதாரணக் கிணறு தோண்டுபவர் | 392.00 | 387.50 | 382.00 |
| (10) | பற்றவைப்பவர் | 406.50 | 405.00 | 387.50 |
| (11) | தலைமைக்கூலியாள் | 302.00 | 299.00 | 295.00 |
| (12) | கூலியாள் | | | |
| | நிலை – 1 | 295.00 | 292.00 | 287.50 |
| | நிலை – 2 | 289.00 | 286.00 | 282.00 |
| (13) | தண்ணீர் தெளிப்பவர் அல்லது கலவைக்காரர் (சாலை பரத்துதல்) / ஒட்டுப்போடும் கருவி இயக்குபவர் | 371.50 | 366.00 | 362.50 |
| (14) | மரம் அல்லது கல் அடைப்பவர் | 371.50 | 366.00 | 362.50 |
| (15) | சேறு அகற்ற கிணற்றுள் செல்பவர் | | | |
| | நிலை – 1 | 392.00 | 387.50 | 382.00 |
| | நிலை – 2 | 382.00 | 378.50 | 373.00 |
| (16) | சுத்தியல்காரர் | 375.50 | 371.50 | 366.00 |
| (17) | ஓலை முடைபவர் | 368.00 | 364.00 | 359.00 |
| (18) | மேஸ்திரி / மேற்பார்வையாளர் | 416.50 | 406.50 | 397.50 |
| (19) | கருமார் | | | |
| | நிலை – 1 | 406.50 | 405.00 | 387.50 |
| | நிலை – 2 | 397.50 | 392.00 | 382.00 |
| (20) | மரம் அறுப்பவர் | 397.50 | 392.00 | 382.00 |
| (21) | இடைவெளி அடைப்பவர் | 375.00 | 371.50 | 366.00 |
| (22) | கலவை இயந்திரம் இயக்குபவர் உட்பட கலவைக்காரர் | 387.50 | 382.00 | 373.00 |
| (23) | பம்ப் இயக்குபவர் | | | |
| (24) | கலவை இயந்திரம் ஓட்டுபவர் | | | |
| (25) | லாரி ஓட்டுநர் | 397.50 | 387.50 | 382.00 |
| (26) | லாரி கிளீனர் | 375.00 | 371.50 | 366.00 |
| (27) | ரோடு உருளை ஓட்டுநர் / பாரச் சக்கர ஓட்டுநர் | 397.50 | 387.50 | 382.00 |

| தொடர் எண். (1) | பணியாளர்களின் வகைகள். (2) | நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள். (3) | | |
|---|---|---|---|---|
| | | மண்டலம் A ரூ.காசு | மண்டலம் B ரூ.காசு | மண்டலம் C ரூ.காசு |
| (28) | குமாஸ்தா (எழுத்தர் அல்லது நேரக்காப்பாளர்) / பண்டகக் காப்பாளர் | 382.00 | 378.50 | 373.00 |
| (29) | கன பொறியியல் கட்டுமானம் அல்லது கனரக இயந்திர பாலம் அமைப்பு வேலையில் ஈடுபடுத்தப்படும் கலாசி அல்லது சீரங்கு முதலானோர் | | | |
| | நிலை – 1 | 416.50 | 406.50 | 397.50 |
| | நிலை – 2 | 406.50 | 405.00 | 387.50 |
| (30) | பிக்கோட்டா பணியாளர் | 364.00 | 359.00 | 355.00 |
| (31) | காவலாள்/உதவியாள் | 364.00 | 359.00 | 355.00 |
| (32) | மொசைக் மெருகேற்றுபவர் | 406.50 | 405.00 | 387.50 |
| (33) | ஜேசிபி இயக்குபவர் | 426.50 | 416.50 | 407.50 |

**விளக்கங்கள்: (1)** மண்டலங்களின் வகைப்பாடுகள் பின்வருமாறு :—

**மண்டலம் – A:** அனைத்து மாநகராட்சிகள் மற்றும் காப்பு வனம் மற்றும் ஐந்து கி.மீ. உட்பட்ட பகுதியில் நடைபெறும் வேலைகளும் கீழ்க்கண்ட மலை வாழிடங்களும் அடங்கும்.

**மலை வாழிடங்கள்**

(1) நீலகிரிப் பீடபூமி

(2) கோயமுத்தூர் மாவட்டத்தில் வால்பாறை உள்வட்டம்

(3) சேர்வராயன் குன்றுகள்

(4) கொடைக்கானல்

(5) பீர்மேடு

(6) திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி சரக களக்காடு காப்புவனப்பகுதியில் செங்கல்தேரி

(7) விருதுநகர் மாவட்டம், திருவில்லிப்புத்தூர் சரக திருவில்லிபுத்தூர் காப்புவனப் பகுதியிலுள்ள முதலியார் ஊத்து

(8) நீலகிரி மாவட்டத்தில், கூடலூர் வட்டம்

(9) வேலூர் மாவட்டத்தில் ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலைகள்

**மண்டலம் – B:** அனைத்து வகை நகராட்சிகளும் அடங்கும்

**மண்டலம் – C:** A மற்றும் B மண்டலங்களில் சேர்க்கப்படாத ஏனைய பகுதிகள் அனைத்தும்.

(2) தொழிலாளர்களின் நிலை–1 மற்றும் நிலை–2 என்ற வகைப்பாடு உடல் திறன், தனித்திறமை, இயங்குதிறம் மற்றும் பணி முடிக்கும் அளவு ஆகியவற்றின் அடிப்படையிலானது.

(3) செய்யும் வேலைக்கேற்ற ஊதியம் பெறும் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில், நாளொன்றுக்கு எட்டுமணி நேரத்தில் அவர்கள் பெறும் ஊதியம் அதே வகையிலான தொழிலாளர்களுக்கு தற்போது திருத்தியமைக்கப்பட்டுள்ள ஊதியத்திற்குக் குறையக்கூடாது. மேற்குறிப்பிட்ட கூலி வீதங்களை கணக்கிடும்போது ஒரு நாள் பணி என்பது எட்டு மணி நேர வேலையாகும். பணியாளர் எட்டு மணி நேரத்திற்கும் குறைவாகப் பணியாற்றினால் அதற்குத் தக்கவாறான வீதத்தில் ஊதியம் கணக்கிடப்படவேண்டும்.

(4) **அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி நாளொன்றுக்கு ரூ. 2.20 (ரூபாய் இரண்டு மற்றும் இருபது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) மாதாந்திர ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிளெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (நிலை) எண். 59, தொழிலாளர்–வேலைவாய்ப்பு (J2)த் துறை, 18 ஜூன் 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 9 ஆம் பிரிவு, 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதி ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், எந்தவொரு உள்ளாட்சி அமைப்பின் கீழும் தொழிலில் பணியமர்த்துவதற்கான குறைந்தளவு ஊதிய வீதங்களைத் திருத்தியமைக்கும் பொருட்டு மாநில அரசுக்கு ஆலோசனை வழங்கவும் விசாரணைகள் மேற்கொள்ளவும் பின்வரும் உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை இதனால் நியமிக்கிறார்.

**தனிநபர்கள்:**

| | | |
|---|---|---|
| (1) தொழிலாளர் நலத்துறை துணை ஆணையாளர்,<br>மதுரை | : | தலைவர் |
| (2) தொழிலாளர் நலத்துறை ஆய்வாளர்,<br>மதுரை | : | செயலாளர் |
| (3) உதவி இயக்குநர்,<br>பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை,<br>சென்னை–600 006. | : | உறுப்பினர் |

**தொழிலாளர்களின் பிரதிநிதிகள்:**

| | | |
|---|---|---|
| (1) திரு. எம் அப்துல் ஹமீது,<br>பொருளாளர், அண்ணா தொழிற்சங்கப் பேரவை,<br>எண். 13, 5ஆவது தெரு,<br>ஸ்ரீராம் நகர், ஐ.ஐ.டி. அருகில்,<br>தரமணி அஞ்சல், சென்னை–600 113. | : | உறுப்பினர் |
| (2) திரு. கே.ஆர். கணேசன்,<br>மாநிலச் செயலாளர்,<br>இந்திய தொழிற்சங்க மையம், (சி.ஐ.டி.யு.)<br>114, மெங்கைல்ஸ் சாலை,<br>திண்டுக்கல்–624 001. | : | உறுப்பினர் |
| (3) திரு. என். மாய கிருஷ்ணன்,<br>இந்திய தேசிய தொழிற்சங்க காங்கிரஸ் (ஐ.என்.டி.யு.சி.),<br>எண். 25C/22–3, காமராஜ் நகர்,<br>முதல் தெரு, கொருக்குபேட்டை,<br>சென்னை– 600 021. | : | உறுப்பினர் |

(4) திரு. ஆர். வெங்கடாசலபதி, : உறுப்பினர்
இந்து மஸ்தூர் சபா (எச்.எம்.எஸ்.).,
193/B ரயில்வே காலனி,
காந்தி இர்வின் சாலை, எழும்பூர்,
சென்னை–600 008.

**வேலை அளிப்பவரின் பிரதிநிதிகள்:**

(1) திரு. வி. ராஜன் துரை, : உறுப்பினர்
இணை இயக்குநர் (பொது),
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம்,
சென்னை–600 108.

(2) திரு. எஸ். செபஸ்டின் : உறுப்பினர்
இணை இயக்குநர் (நிருவாகம்),
நகராட்சி நிருவாக ஆணையரகம்,
சேப்பாக்கம்,
சென்னை–600 005.

(3) திரு. டி. அர்ஜுனன், : உறுப்பினர்
திட்ட இயக்குநர்,
தேசிய குழந்தைத் தொழிலாளர் திட்டம்,
மாநகராட்சியின் பள்ளிக் கல்வித் துறை,
400–D, ராமலிங்க காலனி,
சென்னை–600 110.

(4) திரு. கே. ராசமணி, : உறுப்பினர்
கூடுதல் இயக்குநர்,
கிராமப்புற வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரகம்,
பனகல் மாளிகை,
சென்னை–600 015.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

## தொழிலாளர் வேலைவாய்ப்பு துறை

*[அரசாணை (2D) எண். 28, தொழிலாளர் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 19 ஜூன் 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 14–12–2005 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2ல், 509 மற்றும் 510 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/907/2005 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்கு பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (a) பகுதியின் கீழ் நியமனம் செய்யப்பட்ட ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் பாதுகாப்புக் காவலர்கள் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, விவர அட்டவணையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார்.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அதுநாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**பாதுகாப்புக் காவலர் பணிகளில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | *மண்டலம்* *A* *ரூ.காசு* | *மண்டலம்* *B* *ரூ.காசு* | *மண்டலம்* *C* *ரூ.காசு* |
| (1) | மேலாளர் | 11,335.00 | 10,473.00 | 9,035.00 |
| (2) | உதவி மேலாளர் | 10,473.00 | 9,898.00 | 8,460.00 |
| (3) | மேற்பார்வையாளர் | 8,460.00 | 7,885.00 | 7,023.00 |
| (4) | உதவியாள் | 7,023.00 | 6,735.00 | 6,160.00 |
| (5) | முதுநிலை பாதுகாப்பு ஆய்வாளர்/ பாதுகாப்பு அலுவலர் | 10,473.00 | 9,898.00 | 8,460.00 |
| (6) | கார்ப்பொரல் / சார்ஜென்ட் / உதவி பாதுகாப்பு அலுவலர் | 9,323.00 | 8,748.00 | 8,173.00 |
| (7) | தலைமை காவலாள் / முதுநிலை காவலாள் | 8,173.00 | 7,598.00 | 7,023.00 |
| (8) | பாதுகாப்புக் காவலர் (ஆண் / பெண்) | 6,448.00 | 6,160.00 | 5,873.00 |

**விளக்கங்கள்:**—(1) **மண்டலங்களின் வகைப்பாடுகள் பின்வருமாறு:—**

மண்டலம்—A : அனைத்து மாநகராட்சிகளும் அடங்கும்.

மண்டலம்—B : அனைத்து நகராட்சிகளும் அடங்கும்.

மண்டலம்—C : A மற்றும் B மண்டலங்களில் சேர்க்கப்படாத ஏனைய பகுதிகள் அனைத்தும்.

**அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*i*) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ.36.45 (ரூபாய் முப்பத்தாறு மற்றும் நாற்பத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(*ii*) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்படவேண்டும்.

(*iii*) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

**தொழிலாளர் வேலைவாய்ப்பு துறை**

*[அரசாணை (2D) எண். 30, தொழிலாளர் வேலைவாய்ப்பு (J1)த் துறை, 1 ஜூலை 2014.*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, மேற்படி சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 30–06–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II பிரிவு 2ல், 560 மற்றும் 561 ஆகிய பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/398/2010 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு, அதற்கு பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், கீழேயுள்ள விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள தமிழ்நாடு மாநிலத்தில் காகித உற்பத்தித் தொழிலில் இயந்திரம் மூலம் காகிதம் தயாரித்தல் மற்றும் அது தொடர்பாக நேர்கின்ற நடைமுறைப் பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள பணியாளர்கள் வகையினருக்கு வழங்க வேண்டிய குறைந்த அளவு ஊதிய வீதங்களை, விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு ஏற்கனவேயே வெளியிடப்பட்டுள்ளது.

2. இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும் அதுநாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**காகித உற்பத்தித் தொழிலில் இயந்திரம் மூலம் காகித தயாரிப்பு மற்றும் அது தொடர்பாக நேர்கின்ற நடைமுறைப் பணிகளில் வேலைவாய்ப்பு**

| *பணியாளர்களின் வகைகள்* (1) | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* *ரூ. காசு* (2) |
|---|---|
| **(1) தேர்ச்சி பெறாதவர்கள்** | |
| (i) ஒட்டுநர் | 4750.00 |
| (ii) அச்சகப் பணியாளர் | 4710.00 |
| (iii) அனைத்து வகைத் தொழிலாளர் | |
| **(2) ஓரளவு தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| (i) சாயமேற்றுபவர் | 4874.00 |
| (ii) இயந்திரம் கவனிப்பவர் | |
| (iii) தூய்மைப்படுத்துபவர் | |
| (iv) இழைக்கம்பிப் பணியாளர் | |
| (v) தையல் மற்றும் சிப்பம் கட்டுபவர் | |
| (vi) பொருத்துநர், கம்மிய உதவியாளர் மற்றும் இதர உதவியாளர்கள் | |
| (vii) கூழ்ப்படுத்துபவர் | |

| *பணியாளர்களின் வகைகள்* *(1)* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* *ரூ. காசு* *(2)* |
|---|---|
| **(3) தேர்ச்சி பெற்றவர்கள்:** | |
| (i) கொதிகலன் இயக்குபவர் | 5202.00 |
| (ii) நீர் சுத்திகரிப்பு ஆலையின் இயந்திரம் இயக்குபவர் | |
| (iii) ஈருருளை அழுத்துகருவி இயக்குபவர் | |
| (iv) காகித இயந்திரம் இயக்குபவர் | |
| (v) கூழ் தயாரிப்புக் கருவி இயக்குபவர் | |
| (vi) வெட்டுக்கருவி இயக்குபவர் | |
| (vii) அதனையொத்த இதர இயக்குபவர்கள் | |
| (viii) மின் பணியாளர் | |
| (ix) பற்றவைப்பவர் | |
| (x) கம்மியர்/பொருத்துநர் | |
| (xi) தச்சர் | |
| (xii) கருமார் | |
| (xiii) பாவுதள முடிப்பர் | |
| (xiv) கடைசல் பணியாளர் | |
| **(4) உயரளவு தேர்ச்சி பெற்றவர்:** | |
| மேற்பார்வையாளர் | 5489.00 |
| **(5) பல்வகைப் பணியாளர்:** | |
| (i) கணக்காளர் | 5202.00 |
| (ii) தட்டச்சர்/எழுத்தர்/ஒட்டுநர் | 4792.00 |
| (iii) தரக் காவலாள் | 4874.00 |

**விளக்கங்கள்: (1) அகவிலைப்படி:** மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது (அதாவது 2001 ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ. 29.25 (ரூபாய் இருபத்தொன்பது மற்றும் இருபத்தைந்து காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக்குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை *தமிழ்நாடு அரசிதழில்* வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(3) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26 ஆல் வகுக்க வேண்டும்.

(4) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தி*
*(மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.